## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 242/2018 | Date : 14.12.2023 | PW1 |
|---|---|---|
| Name: சாந்தி | W/o. மணி | |
| Evidence Recorded Time: 12.41 P.M. to 01.00 P.M | | |

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

நான் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் வாங்கிய சொத்தை பொய் பத்திரம் தயார் செய்து அவர் பெயரில் மாற்றியுள்ளதால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதிகள் நான் தாக்கல் செய்த வழக்கிற்கு என்ன பதில் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் தெரியாது. எனது மாமனார் மாரியப்பனின் அப்பா பெயர் தெரியுமா என்றால் அவர் பெயர் குப்பகவுண்டர் ஆகும். மேற்படி குப்ப கவுண்டருக்கு இரண்டு மனைவிகள் என்றாலும் 1) சோலையம்மாள், 2) சின்னப்பொன்னு என இரண்டு மனைவிகள் என்றால் சரிதான். சோலையம்மாளுக்கு கிருஷ்ணன், ரங்கசாமி, பெருமா என மூன்று வாரிசுகள் என்றாலும், சின்னப்பொன்னுவிற்கு எனது மாமனார் மாரியப்பன் மட்டும் வாரிசு என்றாலும் சரிதான். குப்பகவுண்டர் சொத்துக்களில் அவரின் வாரிசுகளில் ஒருவரான கிருஷ்ணனுக்கு 2000-ம் வருடத்திற்கு முன்பே வாய்மொழியாக பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியும். கிருஷ்ணனுக்கு லட்சுமி என்ற மனைவி உள்ளார் என்றால் சரிதான். லட்சுமி இறந்துவிட்டார் என்றால் சரிதான், லட்சுமிக்கும் கிருஷ்ணனுக்கும், 4ம் பிரதிவாதி வெள்ளையம்மாள், 5ம் பிரதிவாதி கோவிந்தம்மாள், 6ம் பிரதிவாதி முருகன், 7ம் பிரதிவாதி சரசு ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். லட்சுமி இறப்பிற்கு பின்னிட்டு கிருஷ்ணன் 1ம் பிரதிவாதி பழனிம்மாளை திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். கிருஷ்ணனுக்கும், 1ம் பிரதிவாதிக்கும் 2ம் பிரதிவாதி வேணி (எ) கிருஷ்ணவேணி, 3ம் பிரதிவாதி ராஜேந்திரன் ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். கிருஷ்ணனுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை கிருஷ்ணன் இறப்பிற்கு பின்னிட்டு 1 முதல் 7 பிரதிவாதிகள் கூட்டாக அனுபவிப்பதில் பிரச்சனை ஏற்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாதி அந்த சொத்துக்களை பிரித்து கொள்ள வேண்டி இந்த நீதிமன்றத்தில் அசல் வழக்கு

எண்.34/2004 என்ற வழக்கை தாக்கல் செய்தார் என்றால் அதுபற்றி தெரியாது. அசல் வழக்கு எண்.34/2004 வழக்கின் சொத்தை எனது மாமனார் மாரியப்பன் மற்றும் அவரது வாரிசுகள் ஆகியோர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்த்துள்ளார்கள் என்றால் தெரியாது. எனது மாமனாருக்கு இரண்டு மனைவிகள் என்றால் சரிதான். மாரியம்மாள் முதல் மனைவி என்றால் சரிதான். சின்னபொண்ணு இரண்டாம் மனைவி ஆவார். மாரியம்மாளுக்கு 8ம் பிரதிவாதி சங்கரன், 9ம் பிரதிவாதி பெருமாள், 10ம் பிரதிவாதி கோவிந்தன் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். 2ம் மனைவி சின்னபொண்ணுவிற்கு சோலையம்மாள், சாந்தி, 5ம் வாதியின் தந்தை சின்னதுரை, என் கணவர் மணி ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். சின்னதுரை இறந்தவிட்டார் என்றாலும், அவரின் மனைவி பழனியம்மாள் உயிருடன் இருக்கிறார் என்றாலும் சரிதான். மேற்படி சின்னதுரைக்கும், பழனியம்மாளுக்கம் பிறந்தவர்தான் 5ம் பிரதிவாதி என்றால் சரிதான். எனக்கும் என் கணவருக்கும் பிறந்தவர்கள் தான் இந்த 2 முதல் 5 வாதிகள் என்றால் சரிதான். வழக்கு சொத்தை என் மாமனாரும் சேர்ந்து வாங்கியதாகதான் வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் மாமனாரின் வாரிசுகள் அனைவரையும் இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை.

(வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/–PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.